**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**
**முன்னிலை – திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.பி.எல்.,**
**சார்பு நீதிபதி, கொடுமுடி.**
**2025ம் வருடம் ஏப்ரல் மாதம் 1ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**2055 திருவள்ளுவராண்டு ஸ்ரீ குரோதி வருடம் பங்குனி மாதம் 18ம் நாள்**

இடைநிலை மனு எண்.8/2022
அசல் வழக்கு எண்.76/2024

1. மாவட்ட ஆட்சியர்,
அருக்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.
2. வருவாய் கோட்ட அலுவலர்
ஈரோடு.
3. மாவட்ட வருவாய் அலுவலர்,
ஈரோடு மாவட்டம்.
4. தாசில்தார், கொடுமுடி தாலுக்கா,
கொடுமுடி. .. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 1 முதல்4

// எதிர் //

1. M. மணிமேகலை
2. T. செந்தில்வேல்
அவரது முகவர் சின்னசாமி .. எதிர்மனுதாரர்கள்/வாதி–5ம் பிரதிவாதி

01.11.2022 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 7, விதி 11 மற்றும் பிரிவு 151ன்படி மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு, வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 21.03.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.S.V.வாசுதேவன் அரசு தரப்பு வழக்குரைஞர் அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.P. மாணிக்கம் வழக்கறிஞர் அவர்களும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற

பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்—

**<u>உத்தரவு</u>**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>**

2.1. அசல் வழக்கானது, 1ம் எதிர்மனுதாரரால் விளம்புகை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வழக்குரையில் ரீ.சர்வே நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளதால் அது அவரை கட்டுப்படுத்தாது என்றோ, 2ம் மனுதாரரான வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு அவர்கள் பிறப்பித்த உத்தரவை ஆட்சேபிக்க முடியாது. ரீ.சர்வே நடவடிக்கையில் செயல்பாட்டுக்கு வந்த பிறகு 2ம் மனுதாரர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து சட்டப்படி மேல்முறையீடுதான் தாக்கல் செய்ய வேண்டும்.

2.2. 1ம் எதிர்மனுதாரர் ரீ.சர்வே நடவடிக்கைகளை ஆட்சேபிக்காத நிலையில் ரீ.சர்வே நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு இருக்கும்நிலையில் Survey Boundary Act ன்படி உடனடியாக ஆட்சேபணை செய்திருக்க முடியும். ரீ.சர்வே நடவடிக்கையானது இறுதி செய்யப்பட்டு அனைத்து தரப்பினர்களும் அதை ஏற்றுக் கொண்டதாகவும், ஒரு சரவணன் என்பவர் 2ம் மனுதாரர் பிறப்பித்த உத்தரவின்பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் குறைவுற்று இருக்கும் பட்சத்தில் பட்டா பாஸ்புக் ஆக்ட்டின்படி எவ்வித காலதாமதமின்றி 3ம் எதிர்மனுதாரரிடம் மேல்முறையீடு செய்திருக்க வேண்டுமென்றும், 3ம் மனுதாரர் மாவட்ட வருவாய் அதிகாரியிடம் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை.

2.3. 1ம் எதிர்மனுதாரர் ரீ.சர்வே நடவடிக்கையை ஆட்சேபித்தோ அல்லது 2ம் எதிர்மனுதாரரின் உத்தரவை எதிர்தோ பரிகாரம் கோரவில்லை.

உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 80ன்படி உரிய காலக்கெடுவிற்குள் அறிவிப்பு அனுப்பவில்லை. தாவா சர்வே எண் காலையில் பல்வேறு நபர்கள் அனுபவித்து வருவதாலும், 1ம் எதிர்மனுதாரர் விளம்புகை பரிகாரம் கோரிதாவா தாக்கல் செய்துள்ளதால் அனைத்து நபர்களையும் தரப்பினர்களாக சேர்த்து தாவா தாக்கல் செய்ததாததால் அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. தாவாவானது முறையாக வனையப்பட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படாததாலும், சர்வே பவுண்டரி ஆக்ட் மற்றும் பட்டா பாஸ்புக் ஆக்டின்படி தாவா நிலைக்கத்தக்கதல்ல என்பதால் நிராகரிக்கப்பட வேண்டும். மேற்படி இந்த மனுவை நிராகரித்து உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. எனவே வழக்குரை நிராகரிக்கப்பட வேண்டும்.

**3.<u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் எதிர் உரையின் சுருக்கம்:</u>**

3.1. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் மனுவில் கண்டுள்ள சங்கதிகள் எல்லாம் தவறானது, வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை பொறுத்து தாவா நிலைக்கத்தக்கதல்ல என்பதை தாவாவில்தான் தீர்மானிக்க முடியும். தாவாவானது வாதியால் உரிமை மூலத்தின்பேரில் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி, 2ம் மனுதாரர் பிறப்பித்த உத்தரவை ஆட்சேபிக்க வில்லை. 2ம் மனுதாரர் சில உட்பிரிவுகள் பொறுத்தே பட்டா வழங்கியுள்ளது. 2ம் மனுதாரர் அவசரகதியில் பட்டா வழங்காமல் நிராகரிக்கப்பட்டுள்ளது.

3.2. பி அட்டவணை சொத்தானது சின்னியம் பாளையம் ஊர் நத்தத்தில் அமைந்துள்ளதாகவும், ஊர்நத்தமானது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டதல்ல. பி அட்டவணை சொத்தை பொறுத்து பல்வேறு மூல ஆவணங்களானது 1955 ம் வருடம் முதல் ஏற்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தை வாதியின் முன்னோர்கள் முழு உரிமையாளராக அனுபவித்து வந்துள்ளார். தாவா சொத்தின்பேரில் வாதிக்கு உள்ள உரிமையை ஆவண சாட்சியம் மூலமாக நிரூபிக்க உள்ளதாகவும், மூல ஆவணத்தின்பேரில்

தரப்பினர்களுக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு சிவில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதாகவும், பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்த இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5.<u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

மனுதாரர்கள் தரப்பில் மேற்படி அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரரால் விளம்புகை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வழக்குரையில் ரீ.சர்வே நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளதால் அது அவரை கட்டுப்படுத்தாது என்றோ, 2ம் மனுதாரரான வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு அவர்கள் பிறப்பித்த உத்தரவை ஆட்சேபிக்க முடியாது என்றும் ரீ.சர்வே நடவடிக்கையில் செயல்பாட்டுக்கு வந்த பிறகு 2ம் மனுதாரர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து சட்டப்படி மேல்முறையீடுதான் தாக்கல் செய்ய வேண்டுமென்றும், 1ம் எதிர்மனுதாரர் ரீ.சர்வே நடவடிக்கைகளை ஆட்சேபிக்காத நிலையில் ரீ.சர்வே நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு இருக்கும்நிலையில் Survey Boundary Act ன்படி உடனடியாக ஆட்சேபணை செய்திருக்க முடியும் என்றும் ரீ.சர்வே நடவடிக்கையானது இறுதி செய்யப்பட்டு அனைத்து தரப்பினர்களும் அதை ஏற்றுக் கொண்டதாகவும், ஒரு சரவணன் என்பவர் 2ம் மனுதாரர் பிறப்பித்த உத்தரவின்பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர் குறைவுற்று இருக்கும் பட்சத்தில் பட்டா பாஸ்புக் ஆக்ட்டின்படி எவ்வித காலதாமதமின்றி 3ம் எதிர்மனுதாரரிடம் மேல்முறையீடு செய்திருக்க வேண்டுமென்றும், 3ம் மனுதாரர் மாவட்ட வருவாய் அதிகாரியிடம் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் ரீ.சர்வே நடவடிக்கையை ஆட்சேபித்தோ அல்லது 2ம் எதிர்மனுதாரரின் உத்தரவை எதிர்தோ பரிகாரம் கோரவில்லை என்றும்,

உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 80ன்படி உரிய காலக்கெடுவிற்குள் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும் தாவா சர்வே எண் காலையில் பல்வேறு நபர்கள் அனுபவித்து வருவதாலும், 1ம் எதிர்மனுதாரர் விளம்புகைக பரிகாரம் கோரிதாவா தாக்கல் செய்துள்ளதால் அனைத்து நபர்களையும் தரப்பினர்களாக சேர்த்து தாவா தாக்கல் செய்ததாததால் அசல் வழகக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவாவானது முறையாக வனையப்பட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படாததாலும், சர்வே பவுண்டரி ஆக்ட் மற்றும் பட்டா பாஸ்புக் ஆக்டின்படி தாவா நிலைக்கத்தக்கதல்ல என்பதால் நிராகரிக்கப்பட வேண்டும் என வாதிடப்பட்டது.

6. மனுதாரர் தரப்பை மறுத்து 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் மனுவில் கண்டுள்ள சங்கதிகள் எல்லாம் தவறானது என்றும், வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை பொறுத்து தாவா நிலைக்கத்தக்கதல்ல என்பதை தாவாவில்தான் தீர்மானிக்க முடியும் என்றும் தாவாவானது வாதியால் உரிமை மூலத்தின்பேரில் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வாதி, 2ம் மனுதாரர் பிறப்பித்த உத்தரவை ஆட்சேபிக்க வில்லை என்றும் 2ம் மனுதாரர் சில உட்பிரிவுகள் பொறுத்தே பட்டா வழங்கியுள்ளதாகவும், 2ம் மனுதாரர் அவசரகதியில் பட்டா வழங்காமல் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், பி அட்டவணை சொத்தானது சின்னியம் பாளையம் ஊர் நத்தத்தில் அமைந்துள்ளதாகவும், ஊர்நத்தமானது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், பி அட்டவணை சொத்தை பொறுத்து பல்வேறு மூல ஆவணங்களானது 1955 ம் வருடம் முதல் ஏற்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தை வாதியின் முன்னோர்கள் முழு உரிமையாளராக அனுபவித்து வந்ததாகவும், தாவா சொத்தின்பேரில் வாதிக்கு உள்ள உரிமையை ஆவண சாட்சியம் மூலமாக நிரூபிக்க உள்ளதாகவும், மூல ஆவணத்தின்பேரில் தரப்பினர்களுக்கு வழக்கு

தாக்கல் செய்வதற்கு சிவில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதாகவும், பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்த இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிர்வாதம் செய்யப்பட்டது.

7. 1ம் எதிர்மனுதாரர் ரீ.சர்வே நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டு நடைமுறைக்கு வந்துவிட்டதால் 2ம் மனுதாரர் பிறப்பித்த உத்தரவை சட்டப்படி 3ம் எதிர்மனுதாரரிடம் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்றும் பட்டா பாஸ்புக் ஆக்ட் மற்றும் Survey Boundary Actன் படி சிவில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்துகளின் பேரில் விளம்புகை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாலும், தாவா பி அட்டவணை சொத்தானது சின்னியம்பாளையம், கிராமம் ஊர்நத்தம் என்பதால் அது அரசுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும் தாவா பி அட்டவணை சொத்தை பொறுத்து வாதியின் முன்னோர்கள் கடந்த 1955ம் வருடம் முதல் முழு உரிமையாளராக பல்வேறு உரிமை மூல ஆவணங்களின்படி அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாலும், வாதி தரப்பில் 3ம் மனுதாரர் பிறப்பித்த 06.07.2023 தேதியிட்ட உத்தரவானது தாக்கல் செய்யப்பட்டு அதில் மனுதாரரான வேலுச்சாமி கவுண்டர் மகன் வி. சரவணன் என்பவர் தாக்கல் செய்த சீராய்வு மனுவின்பேரில் நிலம் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளபோது வருவாய் துறை அலுவலர்கள் உத்தரவு எதுவும்பிறப்பிக்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மனுதாரர் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ள தெரிவித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சிராய்வு மனு முடிக்கப்பட்டுள்ளதால் 3ம் மனுதாரரால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளும் பொருட்டு ஏற்கனவே சரவணன் என்பவர் தாக்கல் செய்த சீராய்வு மனுவில் தனது கருத்தை தெரிவித்துள்ளதாலும், அசல் வழக்கானது விளம்புகை மற்றம்

செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இருதரப்பு முழுமையான விசாரணைக்கு பிறகு தான் வாதியின் வழககுரையானது சிவில் நீதிமன்றத்தின் விசாரணைக்கு உகந்ததா இல்லையா என்பது தெரியவரும் என்பதால் இந்த நிலையில் இந்த மனுவில் தீர்வும் காண வேண்டிய அவசியமில்லை என்பதால் இம்மனுவானது அனுமதிக்க போதுமான முகாந்திரம் இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025ம் வருடம் ஏப்ரல் மாதம் 1ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2025.04.01 17:21:25 +0530

சார்பு நீதிபதி,
கொடுமுடி.

**மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள்**
இல்லை.

**மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள்**
இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள்**
இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 16.12.1955 | கிரையப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 15.07.1964 | பாக சாசனப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 31.03.2010 | தான செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 13.04.2017 | முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஈரோடு இ.ம.எண். 1258/20215 in அ.வ.எண். 305/2010ன் சமரச இறுதி உத்தரவு | |
| எ.ம.சா.ஆ.5 | - | அ.வ.எண். 305/2010ன் பிராது | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.6 | - | அ.வ.எண். 305/2010ன் எதிர்வழக்குரை | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.7 | - | 1346.23 சதுர மீட்டர் பூமிக்கு பட்டா வழங்க கோரி மனு | அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.8 | 24.07.2019 | உத்தரவு | நகல் |
| எ.ம.சா.ஆ.9 | | அ.வ.எண். 277/2018ன் பிராது | சான்றிட்ட நகல் |

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2025.04.01 17:21:12 +0530

சார்பு நீதிபதி,
கொடுமுடி.